Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 02 (16 - 06 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 118

## நாணய கட்டுப்பாட்டு விதிகளை மாற்ற முடிவு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்பவர்களுக்கான நாணயக் கட்டுபாட்டு விதிகளில் மேலும் மாற்றம் செய்வதற்கு மத்திய வங்கி முடிவு செய்துள்ளது. தற்போது உள்ள பிரமாணங்களின் படி இலங்கையர்கள் எந்தவொரு நாட்டிற்கும் வருடத்தில் ஒருமுறை தான் பிரயாணம் செய்யலாம். இந்தக் (6ஆம் பக்கம் பார்க்க)

படுகொலை நிகழ்ந்த கொக்கட்டிச் சோலைக்குள்

# சிறிலங்கா பிரதமர் செல்வதற்கு இராணுவம் அனுமதி மறுப்பு

## உயர்மட்ட விசாரணைக் குழுவிற்கும் தடை

(கொழும்பு)

படுகொலை நடைபெற்ற கொக்கட்டிச் சோலைப் பகுதியைப் பார்வையிடுவதற்கு சிறிலங்காவின் பிரதம மந்திரியும், பாதுகாப்பு இணை அமைச்சருமான டி. பி. விஜயதுங்காவிற்கும் சிறிலங்கா ஜனாதிபதியின் உயர்மட்ட விசாரணைக் குழுவிற்கும் அனுமதி வழங்க சிறிலங்கா இராணுவம் மறுத்துள்ளது.

கடந்த பன்னிரண்டாம் திகதி படுகொலை நடந்த கொக்கட்டிச்சோலைப் பகுதியைப் பார்வையிடுவதற்காக மட்டக்களப்பு சென்ற டி.பி. விஜயதுங்காவையும், உயர் மட்ட விசாரணைக் குழுவையும் பாதுகாப்பின்மை எனக் காரணம் காட்டி அங்கு செல்ல விடாது இராணுவம் தடுத்து விட்டதாகத் தெரிய வருகின்றது.

ஆனால் உண்மையில் அப் பகுதிக்குச் சிறிலங்கா பிரத (6ஆம் பக்கம் பார்க்க)

## 9 ஆம் நாள் விழாவில இலட்சக்கணக்கில் மக்கள்

(யாழ்ப்பாணம்)

அலைகடலென திரண்டிருந்த இலட்சக் கணக்கான மக்கள் மத்தியில் நேற்று மாலை ஆறு மணியளவில் முத்தமிழ்விழாவின் ஒன்பதாம் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. தீவகப் பொறுப்பாளர் சுதா மங்கள விளக்கேற்றி, மங்கள இசைமுழக்க ஆரம்பித்த இவ்விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மகளிர் பிரிவைச்சேர்ந்த ஆர்த்தி அவர்களின் ஆரம்ப உரையும், மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் பொறுப்பாளர் பரா அவர்களின் சிறப்புரையும், செந்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சிறப்புரையும் இடம்பெற்றன.

அடுத்து வீர உணர்ச்சிகளை தூண்டும் வகையிலான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நேற்றைய அரங்கில் வன்னிப் பிராந்திய தளபதி பால்ராஜ் அவர்களும், வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மீனா அவர்களும் கலந்துகொண்டனர்.

கொக்கட்டிச்சோலை படுகொலை

## விசாரணை நடத்த உயர் மட்டக் குழு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் கொக்கட்டிச் சோலையில் அப்பாவிப் பொது மக்கள் கொலை செய்யப்பட்டது குறித்து உடனடியாக ஸ்தலத்துக்குச் சென்று பூர்வாங்க விசாரணைகள் நடாத்துவதற்கென உயர்மட்ட விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப் (6ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை விரும்பாத அதிகாரிகளே காரணம்

- மொஸ்கோ வானொலி

(மொஸ்கோ)

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை விரும்பாத இராணுவத்தில் உள்ள சில உயர் அதிகாரிகளே கொக்கட்டிச் சோலைப் படு (6ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவம் மீதான கட்டுப்பாடு பிரேமதாசாவிடம் இல்லை

- திலகர்

(லண்டன்)

தமிழர்கள் வாழும் பகுதிகளை ஆட்சி செய்யும் உரிமை பிரேமதாசாவுக்கு இல்லை என்று லாரன்ஸ் திலகர் கூறியுள்ளார்.

கொக்கட்டிச்சோலை படு (6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழியின் தனித்துவம் பேண போராட முன் வாருங்கள்

- பரா

(யாழ்ப்பாணம்)

"சங்ககாலம் முதல் தமிழர்களுக்கு பாரம்பரியமாகவே போராட்ட உணர்வு, மண் பற்று, தமிழ்ப்பற்று போன்றவை இருந்து வந்துள்ளன. அதேபோல எமது தமிழ் மொழிக்கும் தனித்துவமான அம்சங்கள் உண்டு. நீண்ட கால அன்னியர் ஆதிக்கத்திலும் கூட எமது மொழி தனித்துவம் குன்றாமல் தழைத்து வளர்ந்திருக்கின்றது" இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா அவர்கள் முற்றவெளியில் நேற்று நடைபெற்ற ஒன்பதாம நாள் முத்தமிழ் விழாவில் உரை நிகழ்த்தும் போது கூறினார்.

அவர் தொடர்ந்து உரை (6ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### தர்சன், வரோதயன்

(யாழ்ப்பாணம்)

வீமன் காமப் பகுதியில் கடந்த வியாழனன்று மாலை ஐந்து மணியளவில் நடைபெற்ற வெடிவிபத்துச் சம்பவமொன்றில் தர்சன் (கிரிதரன் பொன்ராசா, சித்தங்கேணி வட்டுக்கோட்டை), வரோதயன் (பரணீதரன் துன்னாலை தெற்கு, கரவெட்டி) ஆகிய இரு போராளிகளும் மரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மேன்காமத்தில் 14 தமிழர் இராணுவத்தால் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் பதினான்கு தமிழ்ப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை நண்பகல் மேன்காமம் என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளது. கிளிவெட்டியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேன்காமம் பகுதியைச் சுற்றி வளைத்து இவ்விடத்தைச் சேர்ந்த சிவப்பிரகாசம் தர்மலிங்கம், சித்திரவேல் சுந்தரலிங்கம், சின்னநாவி குஞ்சு, நல்லையா சிதம்பரநாதன், சிவலிங்கம் ராசு, குலசேகரம், சண்முகராசா, கந்த (6ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா மாவட்டத்தில்

## புலிகள் - இராணுவம் மோதல் 4 படை பலி, சிறிலங்கா தகவல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பயங்கர சண்டை மூண்டுள்ளதாகவும், சிறிலங்கா விமானப்படை விமானங்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மோதலை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்துள்ளன.

செட்டிகுளம் சந்தியில நிலை (6ஆம் பக்கம் பார்க்க)

கொட்டிடும் மழை கூவிடும் செல்லிவை
கட்டியங்களாய் கவின்கலை வளர்த்திட்ட
மட்டிலாப் புகழ் மண்டு தமிழ் விழா
சொட்டிடும் தேன்தமிழ் தோய்ந்த பெருவிழா
எட்டிடும் பெரும்புகழ் இனிது வளர்கவே!

யாழ் மாவட்ட கூட்டுறவாளர்கள்

முத்தமிழ் விழா சிறப்புற எமது முத்தான வாழ்த்துக்கள்!

(B-2681)

- யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
## யாழ்ப்பாணக் கிளை

பெற்றோர்களை இழந்தவர்களும், அங்கக் குறைவானவர்களும், வலுவிழந்தவர்களும் தமிழ்,ஆங்கில தட்டச்சு,சுருக்கெழுத்து,ஆங்கில மொழி ஆகியன இலவசமாக பயில விரும்பின் 30-06-1991க்கு முன் விண்ணப்பிக்கவும்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
14-06-1991

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

(B 2682)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
29 – 04 – 1978

வீரமரணம்
26 – 06 – 1990

திதி:
16 – 06 – 1991

### வீரவேங்கை தாஸ்
(அருளம்பலம் சந்திரமோகன்)

சுதந்திர தமிழீழத்துக்காக
எதிர்கால வரலாற்றில் நம்பிக்கை வைத்து
நிகழ்காலத்தில் மரணத்தை
அரவணைத்தாய் - நீ

கருப்பட்டமுறிப்பு
மாங்குளம். -குடும்பத்தினர்
(R/1456)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ். கோட்டை இராணுவமுகாம்
நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### அன்ரனி (குணராசா)
(விசுவர் நாகலிங்கம் அன்னம்மாவின்
அருமைப் புதல்வன்)
(அன்ரனி வீதி, கெற்பேலி, மிருசுவில்)

| வீரஜனனம் | திதி | வீரமரணம் |
|---|---|---|
| 12-08-1970 | 16-06-1991 | 26-06-1990 |

அன்னை தந்தை சுற்றத்தாரின் அன்பைப்பெற்றவன்
அடிமை விலங்கை தான் சுமக்க மறுத்தவன்
விடுதலை காணத் தான் துடித்தே எழுந்தவன்
யாழ்கோட்டை தனையே நோக்கி நகர்ந்தவன்
வேங்கை எனத் தான் பாய்ந்து திர்ந்தவன் -தமிழ்
மண்ணுக்காய் அவன் தன்னையே ஈர்ந்தவன்.

மிருசுவில் - கெற்பேலி சிற்றூரவை
(R/1443)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 06 - 16

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இடைக்காடு மகாவித்தியாலய மாணவன், மயிலிட்டியைச் சேர்ந்த 3 வயதுப் பெண் குழந்தை

1990 ஆம் ஆண்டு மாங்குளம் சிறிலங்காப் படைமுகாம் மீதான தாக்குதலில் வீரமரண மெய்திய

**லெப். ஜமால்** (சோமசுந்தரம் தர்மராசா - கோணாவில், கிளிநொச்சி)
**ரகு** (அருணாசலம் மகேந்திரன் - 133 ஸ்கந்த புரம், கிளிநொச்சி)
**ஹாசிம்** (சுப்பையா பாஸ்கரன் - பாரதிபுரம், கிளிநொச்சி)
**தினேஷ்** (யோகானந்தம் பிரபாகரன் - தணுக்காய்)
**சுஜாத்** (நடராசா குமரகுருநாதன் - குரும்பசிட்டி, புலோலி)
**விமலன்** (ஐயம்பிள்ளை செல்வராசா - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)
**பசுமின்** (மாடசாமி பாலசுப்பிரமணியம் - கிளிநொச்சி)
**பரிசால்** (அப்துல்காதர் சம்சுதீன் - சாக்கைகுளம், வவுனியா)

காங்கேசன்துறை ஹாபர்வியூ இராணுவ முகாம் தாக்குதல் முயற்சியின் போது வீர மரணமடைந்த

**மேஜர் விவேகன்** (வல்லிபுரம் இராமேஸ்வரன் - தெணியம்பை, வல்வெட்டித்துறை)
**கப்டன் அன்சார்** (கனகரத்தினம் நரேந்திரன் - தெல்லிப்பளை, கிழக்கு)
**2ஆம் லெப். ஸ்ராலின்** (ச. தயபாலசிங்கம் வல்வெட்டித்துறை)
**தரன்** (உதயகுமார் - மாவிட்டபுரம்)
**தவா** (பாவேல் ஜெயராஜ் - இல. 57, 4 ஆம் குறுக்குதெரு, கொழும்புத்துறை)

யாழ். கோட்டை சிறிலங்கா இராணுவத் தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**ஜெயராஜ்** (புகேந்திரன் ஜெயந்திரராஜா - மயிலியதனை, வல்வெட்டித்துறை)

சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல்களில் வீரமரணமடைந்த

**ஜுனைற்** (பூபாலபிள்ளை புவிராஜ் - களுவாஞ்சிக்குடி)
**முரளி** (ஆரையம்பதி)
**இராமன்** (மரப்பிள்ளை லெப்பை அலிவின் - இறக்காமம்)
**டிக்கின்ஸ்** (கிருஷ்ணபிள்ளை தேவானந்தம் திருப்பழுகாமம்)
**கப்டன் ஆனந்** (தம்பையா சுரேஷ்குமார் - இருதயபுரம்)
**பசிலன்** (பக்தர் புஷ்பநாதன் - விவேகானந்த புரம், வெள்ளாவெளி)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலினால் உயிரிழந்த 3 பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2675)



ஜுனைற்



டிக்கின்ஸ்



முரளி



சுஜாத்



மேஜர் விவேகன



விமலன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
23-09 1971

தமிழவர் மனங்களில்
16-06-1990

### நடராஜா குமரகுருநாதன்
### (சுஜாத்)

(குரும்பகட்டி, புலோலி) (வவுனிக்குளம்)

நீ ஓடி மறைந்து ஓராண்டு ஆகியும்
தேடி அலைகிறோம் தினமும் உன்னை
வீரவேங்கையென வீறு நடை போட்டாய்
வீழ்ந்திட்டாய் விடுதலைக்காய் - சுஜாத்தே
மாவீரர் வரிசையில் இடம்பிடித்து விட்டாய்
மறக்க முடியவில்லை உன் நினைவலைகளை
உன் நாமம் என்றும் வாழும்

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
(B-2674) உறவினர், நண்பர்கள்.

## உதைபந்தாட்டப் போட்டி

மேஜர் லெவின் அவர்களின் ஞாபகார்த்தமாகத் திருமலை ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினர் நடத்திவரும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் நான்கு மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிமைதானத்தில் இடம்பெறவுள்ளது சுன்னாகம் பிரதேசப் பொறுப்பாளர் திரு. வினோத் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஓட்டப்போட்டியில் புதிய சாதனை

(வாஷிங்டன்)

அமெரிக்க ஓட்டப்பந்தய வீரர் லெஸ்ரி பரல் 100 மீ. ஓட்டப் பந்தயத்தில் புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

ஆண்களுக்கான 100 மீ. ஓட்டப் பந்தயத்தில் லெஸ்ரி பரல், 9 90 வினாடிகளில் 100 மீ. ஓடி உலகிலேயே மிகச் சிறந்த ஓட்டப் பந்தய வீரர் ஆகியிருக்கின்றார்.

1987 சியோல் ஒலிம்பிக் போட்டியில் கார் லூயிஸ் 9 93 வினாடிகளில் 100 மீ. தூரத்தை ஓடிச் சாதனையை ஏற்படுத்தினார். இந்தச் சாதனையே லெஸ்ரி பரலால் முறியடிக்கப்பட்டுள்ளது.

## சுற்று நிருபம்

(வேலணை)

வேலணை கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிவரும் ஆசிரியர்கள் தங்கள் பாடசாலைகளில் காலை 8-30 இல்இருந்து பிற்பகல் 2 மணி வரை கடமையில் இருக்க வேண்டும் என்று வேலணை கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார். (14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி | 6 ஆம் மாத நினைவஞ்சலி

| | |
|---|---|
| காசிம் | கோணேஸ் |
| (சுப்பையா பாஸ்கரன்) | (சுப்பையா பேபி சகிலா) |
| வீரஜனனம் 08.01.75 | வீரஜனனம் 18.03.72 |
| வீர மரணம் 16-06.90 | வீரமரணம் 22.11.90 |

உள்ளத்தில் குழந்தையாய் எண்ணத்தில் இனிமையாய்
புல்லாங்குழலின் ஒலிகேட்டு பூரிக்கும் சின்னஞ்சிறு
குழந்தையின் குண மனதுபோல் வளர்ந்தீரே
உங்களைப் பிரிந்து நாங்கள் துயரத்தில் வாடுகிறோம்
உங்கள் பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கின்றோம்
உங்களை இனி எங்கே காண்போம்
உங்கள் இலட்சியம் நிறைவேற
உங்கள் கனவுகள் நனவாக
உங்கள் ஆத்மா சாந்தியடைய
உங்கள் வீரம் ஈழ மண்ணில் அழியாதிருக்க
இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

பாரதிபுரம் (B/2680)

# தங்கத் தலைவனின் தானையில் சேரு; எங்கள் தாயகம் மீட்டிட இங்கு

முத்தமிழின் புகழ்பாடி; எம் முன்னோர்
சொத்தான தாய் நிலத்தை மீட்டிடவே
வித்தாகி விழுதாகி வளர்ந்த பெருமியக்கமது
பத்துத் தினங்களாக எடுக்கும் விழாவிற்கு


## வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

யாழ் வீதி,
மானிப்பாய்.

மானிப்பாய் கோயில்பற்று
வர்த்தகர் சங்கம்

(B-2676)

"பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும்
ஓடையிலே என்சாம்பர் ஓடும் போதும்
ஒண் தமிழில் சலசலத்து ஓடவேண்டும்"



விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின்

# முத்தமிழ் விழா

சிறப்புற

## தமிழன்னையின் பாதக்கமலங்களுக்கு
## மலர் தூவி வணங்கும்

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

## "தேனீக்கள்"
## யூனிவேர்சல்
## கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(B-2677)

■ இந்தனைக்கு ■

அச்சம், பொய்மையின் நெருங்கிய நண்பன் அதுபோலவே, அச்சமின்மையை வாய்மை தொடர்கிறது.

— ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 16 06 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2269
த.பெ.எண் 05

# பேரினவாதிகளிடையே புதிய அச்சம்

தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கும், சர்வதேச நிலபரமும் இன்று என்றுமில்லாதவாறு சிறிலங்கா புத்திஜீவிகளுக்கும் பேரினவாதப் பத்திரிகையாளர்களுக்கும் அச்சம் ஊட்டுபவையாக உள்ளன. இதனை அவர்கள் இன்று வெளிக்காட்டவும் முற்பட்டுள்ளார்கள்.

உலகில் இன்று நடந்து கொண்டிருக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் வெற்றி பெறக் கூடிய போராட்டங்கள் வரிசையில் எரித்திரிய விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமுமே முதன்மையானவையாகும். இவற்றில் எரித்திரியப் போராளிகள் தமது பிராந்தியத்தை தமது பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து விட்டார்கள், இனி அங்கு போர் ஒன்று ஏற்படுமானால் அவர்கள் எல்லை ஓரத்தில்தான் எதியோப்பிய அரசாங்கத்துடன் மோத வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும், வடக்கின் பெரும்பகுதி மீட்கப்பட்டுள்ளது. வடக்கின் எல்லை ஓரத்தில் மோதலை ஆரம்பிக்கும் சிறிலங்கா இராணுவமும் ஊடுருவலைச் செய்யக் கூடியதாக உள்ளதே தவிர நிலை கொள்ள முடியாமல் பின்வாங்கிச் சென்று விடுகின்றது. கிழக்கைப் பொறுத்து தொடர்ந்து நடக்கும் மோதல்களில் ஊந்திக் கொள்பவர்கள் பக்கத்தில் வெற்றி என்ற ரீதியில் சண்டைகள் இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடிகளும் தொடரும் இராணுவத் தோல்விகளும் சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் மாற்றங்களும் சிங்கள புத்தி ஜீவிகளுக்கும் பத்திரிகைகளுக்கும், அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதோடு, கடந்த காலத்தில் சிங்கள பேரினவாதத்தைப் பாதுகாப்பதற்காகத் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளும் வீணாகிவிடுமோ என்ற அச்சத்தையும் உருவாக்கியுள்ளது.

அண்மையில் இலங்கை வரும் தனது நாட்டு பிரஜைகளுக்கு அமெரிக்கா ஓர் வேண்டுகோள் விடுத்தது. அதன் பிரகாரம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்ல வேண்டாம் என்பதோடு, வடக்கு கிழக்கு மாகாணங்களை அண்டியுள்ள சரணாலயங்களான வில்பத்திற்கும், கல்லோயாவிற்கும் செல்ல வேண்டாம் எனவும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அண்டிய மாகாணங்களுக்குச் செல்லும் போது நிலைமையை அவதானித்துச் செல்லும்படியும் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்கா தனது பிரஜைகளுக்கு விடுத்த இந்த வேண்டுகோள் கொழும்பில் இருந்து வரும் 'தி ஐலண்ட்' பத்திரிகையைப் பெரியளவில் குழப்பியுள்ளதோடு அப்பத்திரிகை தேசிய இனப் போராட்டத்தில் அமெரிக்காவின் நிலை என்ன என்பது குறித்து சர்ச்சையும் கிளப்பியுள்ளது.

'தி ஐலண்ட்' பத்திரிகை, இவ்வாறானதொரு சர்ச்சையைக் கிளப்பியுள்ளமையும், தான் குழம்பியுள்ளதும் சர்வதேச நிகழ்வுகளை அவதானித்து வரும் அப் பத்திரிகைக்கு ஏற்படக் கூடியதுதான். குர்திஷ் இனப் போராட்டத்தில் ஈராக்கின் இறைமையை மதியாமல் அமெரிக்காவும் அதன் மேற்குலக நண்பர்களும் நடந்து கொண்டமையும், எரித்திரியா விவகாரத்தில் அமெரிக்கா நடந்து கொண்ட விதமும் இவ்வாறான குழப்பங்களைத் தோற்றுவித்திருக்கலாம். அத்தோடு, பலஸ்தீன விவகாரத்தினால் இஸ்ரேலுடனான "எதற்கும் அப்பாற்பட்ட நீண்டகால நட்பில்" இல் கீறல்களை ஏற்படுத்தக் கூடியதாக அமெரிக்கா சில நடவடிக்கைகளை எடுத்துள்ளமையும், கருத்து தெரிவித்துள்ளமையும் இந்த அச்சத்திற்கு காரணமாகலாம்.

அத்தோடு புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு ஒன்றைத் தனது தலைமையில் ஏற்படுத்த முற்பட்டுள்ள அமெரிக்கா, இந்தியா ஸ்திரமான ஆட்சியை இழந்து நிற்கும் இந்நிலைமையில் இந்தப் பிராந்தியத்தில சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி-இந்தியாவை விரோதிக்காமல் பிரவேசிக்கலாம் என்பதும் பத்திரிகைகளினதும், புத்திஜீவிகளினதும் குழப்பத்திற்கு காரணமாகலாம். இதனை உறுதிப்படுத்துமாப்போலவே அமெரிக்கா உலகின் எந்தப் பிரச்சினையிலும் தற்பொழுது நேரடியாகத் தலையிடும் என்பதற்கு பங்களாதேஷில் நிகழ்ந்த புயல் நிவாரணப் பணிக்கு தமது இராணுவத்தை அனுப்பியது நல்ல எடுத்துக்காட்டாகும்.

இவற்றின் அடிப்படையில் நோக்கும் சிங்கள புத்திஜீவிகளும், பத்திரிகைகளும் அச்சம் அடைந்துள்ள வேளையில், தமிழர் தரப்பு "புத்திஜீவிகள்" பலர் இன்னமும் தமிழர் போராட்டத்தின் வெற்றி குறித்து சந்தேகிப்பதும், வினா எழுப்புவதும் கவலை அளிக்கும் விடயமாக உள்ளது.

# சிறுபான்மையினருக்கு இடையில் வாழும் சிறுபான்மையினர் பற்றி அரசு அக்கறை

(கொழும்பு)

வடக்கிலும் கிழக்கிலும் ஒரு மாகாண சபையின்கீழ் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமென இன அடிப்படையில் இரு சபைகளை அமைக்க உதவுமாறு மூன்று ஐரோப்பிய நாடுகளின் உதவியை அரசாங்கம் நாடவுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் வரையிலான பதினான்கு மாதக் காலப்பகுதியில் அரசாங்கத்தின் சார்பில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட நிதி, உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் சுவிற்சலாந்து, யூகோஸ்லாவியா, செக்கோஸ்லாவியா ஆகிய நாடுகளின் தூதுவராலயங்களை இதற்காக அணுகவுள்ளார். அடுத்த வாரமளவில் பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகும் எனக் கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தமது நாடுகளில் சிறுபான்மையினருக்கிடையில் சிறுபான்மையினராயிருக்கும் மக்களின் பிரச்சனைகளை அந்நாடுகள் எவ்வகையில் அணுகியுள்ளன, என்பது பற்றியே முதலில் இந்நாடுகளுடன் ஆலோசனை கலக்கப்படவுள்ளது.

இந்நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து சிறுபான்மையினர் தொடர்பான விபரங்களைத் தெரிந்து கொள்ளுமாறு சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளைக் ஹமீட் கேட்டதாக, அம்மாநாட்டில் கலந்து கொண்ட அரசியல்வாதி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார். இவ்வகையிலான முதற் சந்திப்பு வரும் திங்கட்கிழமை அன்று நடைபெறலாம் என்றும் அந்த அரசியல்வாதி தெரிவித்தார்.

மத்தியஸ்தம் செய்யுமாறு யூகோஸ்லாவியா கோரப்பட்டிருக்கிறபோதிலும் அதிகப்படியான அதிகாரங்களைக் கேட்கும் சிறுபான்மை இனங்கள் யூகோசிலவாக்கியாவில் இருந்து தம்மைத் துண்டித்துக் கொள்ளும் நிலையும் தோன்றியுள்ளது.

அரசாங்கம் மீளவும் சர்வதேச மனித நேய ஸ்தாபனங்களினூடாகப் புலிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் 'தரகர்' வேலையை மேற்கொள்ளத் தாம் தயாராக உள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொழும்புப் பிரதிநிதி வெற்றாபிரி நேற்று முன்தினம் தெரிவித்தார். இரு தரப்பினருக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கான உதவிகளை வழங்க ஐ. சி. ஆர். சி. எப்போதும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# புலனாய்வு விரைவில் முக்கிய கட்டத்தை அடையும்

- சந்திரசேகர்

(வாரணாசி)

ராஜீவ்காந்தி மரணம் குறித்த புலனாய்வு எதிர்பார்த்ததை விட விரைவாக செயற்பட்டு வருவதாகவும் விரைவில் முக்கிய கட்டத்தை அடைந்து விடும் என்றுதாம் நம்புவதாகவும் இந்தியப் பிரதமர் சந்திரசேகரர் குறிப்பிட்டுள்ளார்.

வாரணாசியில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் இந்த மரணத்தில் வெளிநாட்டு சக்திகளின் பங்கையும் ஏற்றுக்கொள்ளும் அதே நேரம் வெளிநாட்டு சக்திகள் மட்டுமே இந்த மரணத்திற்கு காரணம் என்று கூறுவதற்கில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ராஜீவின் மரணத்தோடு இந்தியா சின்னாபின்னமாகி விடும் என நினைத்தவர்களுக்கு இந்தியாவின் தற்போதைய நிலை திகைப்பூட்டுவதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

## கசினோ தடையால் 7 கோடி நட்டம்

(கொழும்பு)

கசினோ தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து வருடத்துக்கு ஏழுகோடி ரூபா வருமானத்தை அரசு இழக்கும் என்று வருமான வரித்திணைக்கள வட்டாரங்கள் கூறியுள்ளன.

## தேடுவார் அற்ற நிலையில் 3 கார்கள்

(கொழும்பு)

மூன்று விலையுயர்ந்த கார்கள் வெள்ளவத்தை பீற்றர்சன் ஒழுங்கையில் தேடுவாரற்ற நிலையில் கைவிடப்பட்டுக் காணப்பட்டன. கார்களில் ஒன்று மேர்சிடஸ் பென்ஸ் சாகும். கார்ச் சாவிகளும் கார்களிலேயே விடப்பட்டிருந்தன. இப்போது கார்கள் பொலிசாரின் பாதுகாப்பில் உள்ளன.

## தட்டச்சு ரிபன்கள் பறிமுதல்

(பருத்தித்துறை)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த திணைக்கள உயரதிகாரி ஒருவர் திணைக்கள தட்டச்சு இயந்திரங்களுக்கென கொண்டுவந்த தட்டச்சு ரிபன்கள் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (25)

## கொழும்பில் அவுஸ்திரேலிய போர்க்கப்பல்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் கடற்படையில் உள்ள இரண்டாவது உயர்மட்ட கடற்படைக் கப்பலான எச். எம். ஏ. எஸ் பேர்த் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வந்துள்ளது.

1984ஆம் ஆண்டு இந்நாட்டின் முதலாவது கடற்படைக் கப்பலான சார்லஸ் எவ் ஆதாம் கொழும்புக்கு வந்ததன் பின்பு இப்பொழுதுதான் அவுஸ்திரேலியாவின் உயர்மட்ட கப்பல் ஒன்று வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

## முத்தமிழ் விழா

### பத்தாம் நாள் நிகழ்ச்சி நிரல்

இடம்: யாழ்ப்பாணம் 'மாவீரர் கலை அரங்கம்'
நாள்: 16-06-1991 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 5. 30 மணி

★ மங்கள இசை :

நாதஸ்வரம்: திரு: என். கே. பத்மநாதன்
திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி
திரு. வீ. கே. பஞ்சமூர்த்தி

தவில்: திரு. என். ஆர். சின்னராசா
திரு. ரி. உதயசங்கர்
திரு. என். ஆர். புண்ணியமூர்த்தி
திரு. ஆர். எஸ். சுதாகரன்

★ விடுதலைப் புலிகளின் திறப்புரை.

★ சிறப்புரை:

★ நாடகம்: விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரின் "கொடியரின் கொடுமை" நாட்டிய நாடகம்.

★ இசைக்கச்சேரி:

திரு. பொன். சுந்தரலிங்கம் - பாட்டு
திரு. ஆர். ராதாகிருஷ்ணன் - வயலின்
திரு. எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
செல்வன் கே. கண்ணதாசன் - கடம்
செல்வன் கே. துரைராஜா - கஞ்சிரா

★ நாடகம்:

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்
"உயிர்த்து வந்த மனிதர் கூத்து"

★ மெல்லிசை நிகழ்வு:

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "போர்க்காலப் பாடல்கள்"

# முத்தமிழ்விழா பூர்த்தி நாளில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும் முத்தமிழ் விழாவின் இறுதி நாளான இன்று நாதஸ்வர மேதைகளான என். கே. பத்மநாதன், கே. ஆர். சுந்தரமூர்த்தி ஆகியோரின் நாதஸ்வர இசையும், திரு. என். ஆர் சின்னராசா, திரு ரி. உதயசங்கர், திரு. ஆர். எஸ். சுதாகரன் ஆகியோரின் தவில் இசையும் இணைந்து முற்ற வெளியில் இன்று இசை மழை பொழிகிறது.

★ முற்று முழுதாக பெண் போராளிகளாலேயே தயாரிக்கப்பட்டு நடிக்கப்படும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் 'கொடியோரின் கொடுமை' நாட்டிய நாடகம் இன்றைய முத்தமிழ் விழாவில் அரங்கேறுகின்றது.

தமிழீழத்தின் பிரபல பாடகர் சங்கீதபூசணம் திரு. பொன். சுந்தரலிங்கம் இன்றைய முத்தமிழ் விழாவில் தமிழிசை பாடுகின்றார். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் வரைக்கும் தனது இசைவளத்தால் மக்களின் மனதைக் கொள்ளை கொண்ட திரு பொன். சுந்தரலிங்கம் இன்று முற்ற வெளியில் இசைக்கச்சேரி செய்கின்றார்.

★ தமிழீழத்தின் தலைசிறந்த நாடக இயக்குநர் திரு. க. சிதம்பரநாதனின் நெறியாள்கையில் நாடக அரங்கக் கல்லூரி தயாரித்து வழங்கும் ''உயிர்த்து வந்த மனிதர் கூத்து'' என்ற நாடகம் இன்று மேடையேறுகின்றது. ஐம்பதிற்கு மேற்பட்ட கலைஞர்களின் கூட்டுத் தயாரிப்பான இந்த நாடகம் ஈழத் தமிழ் இனத்தின் போராட்ட வரலாற்றை சித்திரித்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

★ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் வெளியீடான ''இந்த மண் எங்களின் சொந்த மண்'' வேங்கைகளின் விடுதலை வேதங்கள், பரணி பாடுவோம் ஆகிய மூன்று ஒலிப்பதிவு நாடாக்களிலுமுள்ள பாடல்களைப் பாடிய சாந்தன், குலசிங்கம், பௌசிகன், சியாமளா, குணமலர், ராதிகா, மிதிலா விவேகானந்தன் ஆகியோர் தாங்கள் பாடிய பாடல்களை மக்களின் முன் நேரடியாகப் பாடுகின்றார்கள். ஒலிப்பதிவு நாடாக்களில் இசை வாத்தியக் கருவிகளை இசைத்த கலைஞர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர். பாடல்களின் இசையமைப்பாளரான திரு. கண்ணன் இந்தப் போர்க்காலப் பாடல்களின் இசை நிகழ்ச்சியை நெறிப்படுத்துகின்றார்.

## பாக். தேர்தல் நடத்த பெனாசிர் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நடுவு நிலை அரசாங்கம் ஒன்றின்கீழ் புதிதாக தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் எனக்கோரி பாகிஸ்தானில் கிளர்ச்சி நடத்தப் போவதாக முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ அறிவித்துள்ளார்.

கடந்த வியாழன் இஸ்லாமாபாத்தில் பெனாசிர் பூட்டோ விடுத்துள்ள அறிக்கையொன்றில், தேர்தல் நடத்த வேண்டும் எனக்கோரி நாடு தழுவிய கிளர்ச்சியை பாகிஸ்தானிய ஜனநாயக கூட்டணி போராட்டம் நடத்தப் போவதாக குறிப்பிட்டுள்ளார்.

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடந்த தேர்தல்களில் பெருமளவு மோசடி நடந்ததாக குற்றஞ்சாட்டிய பெனாசிர் பூட்டோ நியாயமான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஹெலித்தாக்குதல்

இயக்கச்சிப் பகுதியையையமாகக் கொண்டு நேற்று முன்தினம் மாலை 4 15 மணியளவில் ஹெலியிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேதினம் இரவு 7மணி தொடக்கம் நேற்றுக் காலை ஐந்து மணிவரை ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து இப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

இத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

## வீமன்காமத்திலிருந்து எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வீமன்காமத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் மதியம் பன்னிரண்டு மணியளவில் தெல்லிப்பளைப் பக்கமாக இரண்டு துப்பாக்கி எறிகணைகளை ஏவியுள்ளனர்.

இதே தினம் மாலை 4 45 மணியளவில் இப்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தெல்லிப்பளைப பக்கமாக 60 எம்.எம் எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை இதே தினம் மாலை மூன்று மணியளவில் கட்டுவன் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் இது வரை கிடைக்கவில்லை.

### விசாரணை

பட்டுள்ளது.

இளைப்பாறிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியும் பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய சட்ட ஆலோசகருமான டி. பி. ஜெயதிலக ஜெயபதி, பொலிஸ் அத்தியட்சகர் கே. ஜநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் சட்ட விவகார உதவிச் செயலாளர் எ. கே ஜினதாச ஆகியோர் இக் குழுவிற்கு நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

கொலைகளுக்கு காரணமாக இருந்தவர்கள் மற்றும் கொல்லப்பட்ட அல்லது காயமுற்றோரின் விபரங்கள், பொருள் சேதம் அல்லது அழிவு ஆகிய விபரங்கள் அடங்கிய பூர்வாங்க அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கும்படி விசாரணைக் குழுவிற்குப் பணிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்குழு நேற்றுப் பிற்பகல் அங்கு சென்றது. அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

விசாரணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் முடிவில் விசாரணைக்குழு கொக்கட்டிச்சோலையில் முழுமையான பாரபட்சமற்ற விசாரணையை நடாத்துவதற்குப் பூரண அதிகாரம் கொண்ட விசாரணைக்குழு ஒன்று நியமிப்பது பற்றி சிறிலங்கா ஜனாதிபதி பரிசிலனை செய்யவுள்ளாராம்.

### புலிகள் – இராணுவம்

கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் பூநகரிக்குச் சந்தியை நோக்கி முன்னேற முயன்ற வேளையிலேயே இம் மோதல் தொடங்கியது. இம் மோதல் ஐந்துமணியில் இருந்து ஏழு நாற்பத்திஐந்துவரை நீடித்தது.

அதேவேளை, இராணுவத்தினருக்கு உதவியாக இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், ஒரு உலங்கு வானூர்தியும் தொடர்ச்சியாக குண்டு வீச்சு தாக்குதலை மேற் கொண்டன.

இம் மோதல் சம்பவத்தின் போது நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

### ராணுவம்

கொலைச் சம்பவம் பற்றிக் கருத்துத் தெரிவித்த திரு. திலகர் மேலும் கூறுகையில் இராணுவத்தின் மீதான கட்டுப்பாடு பிரேமதாசாவிடம் இல்லை என்பதையே இப்படு கொலைச் சம்பவம் காட்டுவதாகக் குறிப்பிட்டார்.

### பேச்சுவார்த்தை

கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என மொஸ்கோ வானொலி நேற்றிரவு அறிவித்தது.

### தமிழ் மொழி

யாற்றும்போது எமது மொழியின் தனித்துவத்தைப் பாதுகாக்கவும், இழந்த எமது உரிமைகளையும் மீட்டெடுக்க ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் நாம் இந்த முத்தமிழ் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். எமது மண்ணும் மொழியும் தொடர்ந்தும் தனித்துவ தடன் பாதுகாக்கப்படவேண்டுமாயின் எம்முடன் அனைவரும் இணைந்து போராட வேண்டும் என்றார்.

யாழ் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விடுதலைப்புலிகள் மகளிர்முன்னணியைச் சேர்ந்த செல்வி பாரதி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (ஈ)

### சிறிலங்கா

யரோ அன்றி வேறு விசாரணைக்குழுவினரோ செல்வதை இராணுவம் விரும்பவில்லை எனத் தெரிய வருகின்றது.

ஏனெனில் இப்பகுதிக்குச் செல்லும் பாதைகள் யாவும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை கொக்கட்டிச்சோலையில் ஐம்பது பொது மக்களே கொலைப்பட்டதாக இராணுவம் அறிவித்துள்ளது. ஆனால், இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட 166 பேருடைய சடலங்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், ஐம்பது பேரின் சடலங்களை இராணுவம் புதைத்துவிட்டதாகவும், முப்பது பேரைப் பற்றிய தகவல்கள் இல்லை என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இலங்கை வங்கி ஊழியர் சம்பள உயர்வு கோரிப் போராட முடிவு

இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்கவுள்ளது. சம்பள உயர்வு வழங்காவிடில் வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளதாக ஊழியர் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் போர்ச் செலவுகள் அதிகரித்துள்ளதால், வங்கி ஊழியரின் சம்பளஉயர்வுக்கோரிக்கையை வழங்க முடியாது என்று இலங்கை வங்கி முகாமையாளர் கே. கே. காசிம் வங்கி ஊழியர் சங்கக் கிளைச் செயலர் எம். சுகுமாரனிடமும், சிரேஷ்ட உதவிச் செயலர் கிங்ஸ்லி மெண்டிஸிடமும் பேச்சுவார்த்தைகளின்போது தெரிவித்துள்ளார்.

அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி வங்கி ஊழியர் சங்கம் முடிவெடுக்கவுள்ளது.

### ராஜீவ் கொலை தொடர்பாக

## தமிழகப் பொலிஸாரால் மேலும் இருவர் கைது

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மேலும் ஒரு 18 வயது இளைஞனும், ஒரு பெண்ணும் தமிழ் நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்; இவர்களில் ஆண் இலங்கையைச் சேர்ந்தவரென்றும், பெண் முன்னர் கைது செய்யப்பட்ட பெண்ணினது மகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ராஜீவின் சப்பாத்தை

## தன்னிடம் ஒப்படைக்குமாறு சோனியா வழக்குத்தாக்கல்

இறந்த பின்னர் ராஜீவ் காந்தியின் உடலை அடையாளம் காணப்பட உதவியாக இருந்த சப்பாத்துக்களைத் தம்மிடம் ஒப்படைத்து விடும்படி கோரி ராஜீவின் மனைவியார் சோனியாகாந்தி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் தனது கணவனின் சப்பாத்துக்களை ஞாபகார்த்தமாக வைத்திருக்கத் தன்னை அனுமதிக்குமாறும் கோரியுள்ளார். மேலும் இம்மனு மீதான விசாரணை ஜூன் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பூராவும் அமைதியான தேர்தல்

(சென்னை)

தமிழ்நாட்டில் நேற்று வாக்களிப்பு பொதுவாக அமைதியாகவே நடைபெற்றது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அசம்பாவிதங்கள் எதுவும் இல்லாமலேயே வாக்களிப்பு நடந்தது. 60 வீதத்திற்கும் சற்று அதிகமான வாக்காளர் வாக்களித்துள்ளனர். ஆனாலும் அதிகாலையில் வாக்களிப்பு மந்தமாகவே காணப்பட்டது. முதல் நான்கு மணி நேரத்தில் 22 சதவீத வாக்குகளே பதிவாகின.

தமிழகத்தில் 234 உறுப்பினர் கொண்ட சட்ட சபைக்கு 232 தொகுதிகளுக்கு மட்டுமே தேர்தல் நடைபெற்றது. அதுடன் தமிழ்நாட்டில் 39 லோகச் சபைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

### மேன்காமத்தில்

சமிராசு, சின்னத்தம்பி தங்கவடிவேல், கனகையா குஞ்சு, நாகராசா ராசன், லக்சுமணன் ராமு, சிவன் ஆகியோரையும் ஆலங்கேணியைச் சேர்ந்த துரைமன் என்பவரையும் கைது செய்து கிளிவெட்டி முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

இவர்கள் பற்றிய மேலதிக தகவலெதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

## நேற்று கல்வி நிர்வாக சேவை பரீட்சை

(கொழும்பு)

சிறிலங்கா கல்வி நிர்வாக சேவைக்கு ஆள் சேர்க்கும் போட்டிப் பரீட்சை (தமிழ் பிரிவு) நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.

1988 ஆம் ஆண்டிற்குப்பின் நடைபெறும் இப்பரீட்சைக்கு 3000 பரீட்சார்த்திகள் தோற்றினார்கள்.

### நாணய கட்டுப்பாட்டு

கட்டுப்பாடு இப்பொழுது தளர்த்தப்பட்டுள்ளது.

வியட்நாம், மாலைதீவு, நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, பர்மா தவிர ஏனைய நாடுகளுக்கு எத்தனை முறையும் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் ஆனால் கொடுக்கப்படும் அந்நியச் செலாவணிக்கு அமைவாகவே பயணங்கள் செய்யப்படவேண்டும் பயணிகள் ஏயர் லங்கா விமானம் மூலம்தான் பயணம் செய்யலாம்; ஒருமுறைதான் ஏனைய நாட்டு விமானசேவைகள் மூலம் பயணம் செய்யலாம்.

தற்போதைய நாணய மாற்று விகிதமும் 30 சத விகிதத்திலிருந்து 50சத விகிதமாக மாற்றப்படவுள்ளது. கருத்தரங்கு, மாநாடுகளில் கலந்து கொள்வோருக்குத் தனிப்பட்ட முறையில் வழங்கப்படும் அன்னியச் செலாவணி 50 விகிதமாக அதிகரிக்கப்படும். அதாவது நாள் ஒன்றுக்கு 100 அமெரிக்க டாலர் 150 அமெரிக்க டாலராக அதிகரிக்கப் படவுள்ளது.

இலங்கையில் வசிப்பவர்கள் வெளிநாடுகளில் வைத்திருக்கும் சொத்துக்களின் தொகையை நாணய மாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படவேண்டிய நாணயக் கட்டுப்பாட்டுப் படிவம் 91உடனடியாக செயற்படும்படியாக வாபஸ் பெறப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஒருவருடத்தில் ஏற்றுமதி வருமானமாக ரூபா 10 லட்சமும் அதற்குக் கூடுதலாகவும் வருமானம் பெறும் ஏற்றுமதிக் கம்பனிகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள், நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரிகள் ஆகியோருக்கு மாத்திரம் இது வரை காலமும் சர்வதேச கடன் பெறும் அட்டை வசதி வழங்கப்பட்டது. இது சகல ஏற்றுமதி வர்த்தக நிறுவனங்களின் பங்காளிகள், உரிமையாளருக்கும் விஸ்தரிக்கப்படும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 61 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.